# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

9 - ஆம் வகுப்பு

# தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

I குறிப்பு : 1) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளை உடையது. 2) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - 1

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 X 1 = 15

1. 'வாயில் இலக்கியம்' என அழைக்கப்படும் நூல் எது?
அ) பிள்ளைத்தமிழ் ஆ) தூது இ) உலா ஈ) பரணி

2. "காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே - எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே" - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் எவை?
அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

3. 'மிசை' என்பதன் எதிர்ச் சொல் என்ன?
அ) கீழே ஆ) மேலே இசை ஈ) விசை

4. இந்திய நீர்பாசனத்தின் தந்தை என அறியப்படுபவர் யார்?
அ) ஜான் பென்னிகுவிக் ஆ) கரிகால் சோழன்
இ) ஆர்தர் காட்டன் ஈ) விசுவேசுவரய்யா

5. பண்டைய தமிழர்களின் அரிய வரலாற்றுச் செய்திகள் அடங்கிய நூல் எது?
அ) பெரியபுராணம் ஆ) புறநானூறு இ) தமிழ்விடுதூது ஈ) திருக்குறள்

6. பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு இ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

7. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் யாது?
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைக்சொற்கள்

8. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

9. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே - இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

10. 'கள்ளிக்காட்டு இதிகாசம்' புதினத்துக்காக 2003 ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது பெற்றவர் யார்?
அ) தமிழன்பன் ஆ) வைரமுத்து இ) கண்ணதாசன் ஈ) தமிழ் ஒளி

11. தீரா இடும்பை தருவது எது?
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேராண்மை

**பாடலைப் படித்து விடை தருக.**

*"குற்றம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு*
*உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ-திறம்எல்லாம்*
*வந்து என்றும் சிந்தாமணியாய் இருந்த உனைச்*
*சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே"*

12. இப்பாடலடிகள் இடம்பெற்ற நூலின் பெயர் என்ன?
அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம் இ) தமிழ்விடுதூது ஈ) பெரியபுராணம்

13. அடி எதுகை பயின்று வந்துள்ள சொற்கள் எவை?
அ) குறம்-உறவு ஆ) வந்து-சிந்து இ) அ,ஆ,இரண்டும் ஈ) எவையுமில்லை

14. இவ்வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள இசைப்பாடலின் பெயர் என்ன?
அ) குறம் ஆ) பள்ளு இ) சிந்து ஈ) சிந்தாமணி

15. சிந்தாமணி என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) உம்மைத்தொகை

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
**(21 வது வினா கட்டாய வினா)**

16. **விடைக்கேற்ற வினா அமைக்க.**
அ) எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு.
ஆ) சிலப்பதிகாரம் புரட்சிக் காப்பியம் என அழைக்கப்படுகிறது.

17. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

18. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

19. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

20. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

21. விடல் - என முடியும் குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**

22. **பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.**
*(நம்மை, வாழ்வியல் அறிவை)*
அ) நல்ல நூல்கள் .................... நல்வழிப்படுத்துகின்றன.
ஆ) புத்தகங்கள் ................ கொடுக்கின்றன.

23. **பிழை நீக்கி எழுதுக.**
அ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.
ஆ) சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைதளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.

24. **இணைச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**
அ) நகமும் சதையும் ஆ) முதலும் முடிவும்.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

25. பொருள் எழுதித் தொடரமைக்க. வாளை - வாழை.
26. கலைச்சொல் தருக. அ) Cultural Symbol ஆ) Download
27. பகுபத உறுப்பிலக்கணம் தருக. கொடுத்தோர்
28. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக. சேர்ந்து - சேர்த்து.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.**

29. மூன்று என்னும் எண்ணும்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?
30. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
31. **உரைப்பத்தியைப் படித்து விடையளிக்க.**

மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவர் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர் என்று கூறுவர். கூலவாணிகன் (கூலம்-தானியம்) செய்தவர். இக்காரணங்களால் இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று அழைக்கப்படுகிறார்.

அ) பத்தியில் சீத்தலைச் சாத்தனார் இயற்றிதாகக் கூறப்படும் நூல் எது?
ஆ) சாத்தன் என்பது .................. (புனைபெயர் / இயற்பெயர்)
இ) சீத்தலைச் சாத்தனார் வணிகம் செய்த வாழ்ந்த ஊர் எது?

### பிரிவு -2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.**
**(34-வது வினா கட்டாய வினா)**

32. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?
33. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.
34. அடிபிறழாமல் எழுதுக.

அ) `நீர்இன்று அமையா யாக்கைக்கு' என்ற புறநானூற்றுப் பாடல். ***(அல்லது)***
ஆ) `அறிவியல் என்னும் வாகனம் ..........' முதல் `.......... ஏற்றுங்கள்' வரையிலான ஓ! என் சமகாலத் தோழர்களே! பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.**

35. **பத்தியில் இடம்பெற்றுள்ள பெயர்/ வினையடைகளை எடுத்தெழுதுக.**

குமரன் மிகவும் நல்ல பையன் ; பெரியோரை மதிப்பான் ; பெற்றோர் கூறும் வேலைகளை விரைவாகச் செய்வான் ; எல்லோரிடமும் அன்பாகப் பழகுவான் ; இனிமையாகப் பேசுவான் ; பள்ளியில் ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு தெளிவாக விடையளிப்பான். அனைவரும் அவனைச் சிறந்த மாணவன் என்று பாராட்டுவர்.

36. **கீழ்க்காணும் துணைவினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை எழுதுக.**

அ) வேண்டும் ஆ) கொடு இ) காட்டு



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

37. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

கீழடியில் வாழ்ந்த மக்களுள் பலர்ச் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்த பொருள் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு குறைவான எண்ணிக்கையிலேயே தங்கத்திலானப் பொருள்கள் கிடைக்கின்றன. மேலும் இரும்பை பயன்படுத்தி செய்யப்பட்ட கருவிகளும் கிடைத்துள்ளன.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

38. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக. *(அல்லது)*

ஆ) அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

39. அ) உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழச்சிநிரல் ஒன்றினை வடிவமைக்க. *(அல்லது)*

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. அறிஞரின் பொன்மொழிகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

அ) Every flower is soul blossoming in nature - Gerard De Nerval.

ஆ) Sunset is still my favourite colour, and rainbow is second - Mattie Stepanek.

இ) An early morning walk is blessing for the whole day - Henry David Thoreau.

ஈ) Just living is not enough ...... One must have Sunshine, freedom, and a little flower - Hans Christian Andersen.

42. நீங்கள் பிறரால் பாராட்டுப் பெற்ற நிகழ்வுகள் ஐந்தினை எழுதுக.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.**

43. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வுக்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க. *(அல்லது)* ஆ) ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக. *(அல்லது)*

ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45. அ) கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி பொருத்தமான தலைப்புடன் ஒரு கட்டுரை வரைக. திறன்பேசி – காலத்தின் தேவை – நன்மைகள் – தீமைகள் – கட்டுப்பாடும் கவனமும். *(அல்லது)* ஆ) நீங்கள் களப்பயணம் சென்று வந்த தொல்லியல் சார்ந்த இடங்களைக் குறித்து கட்டுரை வரைக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com